# *மேற்காப்பிரிக்காவிலிருந்து…*

மேற்கு ஆப்பிரிக்காவின் (**West Africa**) பெனின் நாட்டிலிருந்து (**Republic of Benin**) வாழ்த்துக்கள். இன்று இங்கு விபூதிப் புதன். தெருவெங்கும் மக்கள் கூட்டம் அலை மோதுகின்றது. என்னவென்று கேட்டால், திரு நீறு பெறுவதற்காக கிறித்தவர்கள் மட்டுமல்ல, ஏனைய மதங்களைச் சார்ந்தவர்களும் இன்று இங்கு ஆலயம் செல்வது வழக்கம்.

இந்நாட்டில் மொத்தம் பத்து மறைமாவட்டங்கள் உள்ளன. இந்நாட்டின் ஆயர் குழு இவ்வாண்டின் தவக் காலத்திற்காக ஏறெடுத்துள்ள திரு வசனம்: "*மனந்திரும்பி, நற்செய்தியை நம்புங்கள்*" என்பதாகும் (மாற்கு 1:15). பொதுவாக, பிறர் மனந்திரும்ப வேண்டுமே என்று நாங்கள் கவலைப் படுவது வழக்கம். தாங்களும் மனந்திரும்ப வேண்டுமே என்று கவலைப் படுவோர் மிகக் குறைவே என்று ஆயர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். மேலும், இறைவன் எங்களையெல்லாம் பரிசுத்தமாக்குவார் என்று நம்புங்கள். எங்கள் சிக்கல்களுக்கு விரைவில் விடிவு வரும் என்று நம்புங்கள். எங்கள் வாழ்வு மீண்டும் மலர்ச்சி பெறும் என்று உண்மையாக நம்புங்கள். – என்று ஆயர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஏழ்மையின் பாரத்தினால் உள்ளம் நொறுங்கியவர்களாக, மனம் நொந்து போனவர்களாக, "*கடவுளுக்கேற்ற பலி நொறுங்கிய நெஞ்சமே. கடவுளே, நொறுங்கிய குற்றமுணர்ந்த உளத்தை நீர் அவமதிப்பதில்லை*" (திருப்பாடல்கள் 51:17) என்ற தாவீது அரசரின் வாக்கினைத் தம் வாக்காக மாற்றி இவர்கள் செபிக்கின்றனர்.

ஆப்பிரிக்க நாடுகளை ***Shithole Countries*** என்று அமெரிக்க அதிபர் ***Donald Trump*** அழைத்திருப்பது இவர்கள் உள்ளத்தில் ஒரு சிறு காயமாக மாறியுள்ளது. அது மட்டுமல்ல, அமெரிக்காவானது வழக்கமாக ஆப்பிரிக்க நாடுகளுக்குச் செய்து வந்த பண உதவியும் இவ்வாண்டு கணிசமாகக் குறைந்துள்ளது. ஆப்பிரிக்க மக்கள் அமெரிக்கா செல்ல விசா எடுப்பதும் சிக்கலான விடயமாக மாறி வருகின்றது. அமெரிக்க அதிபரோ, தான் அவ்வாறு சொல்லியிருந்திருக்கக் கூடாது என்று மன்னிப்புக் கேட்டிருப்பதை இவர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ள வில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், ஏழைகளைப் பற்றியும், அகதிகளைப் பற்றியும் பாப்பரசர் **Francis** சொல்வதெல்லாம் தேனாக வந்து இவர்கள் காதுகளில் விழுந்து, இவர்களுக்கு சந்தோசத்தையும் ஆறுதலையும் தருவதாக அமைகின்றது.

அது போக, ***France*** நாட்டு ஜனாதிபதி ***Emmanuel Macron*** இதைப் பற்றி அமெரிக்க அதிபரைக் கண்டித்திருப்பது அனைவருக்கும் மிகுந்த திருப்தியாக அமைந்துள்ளது. ***France*** நாட்டைத் தவிர, மற்ற நாடுகளின் தலைவர்கள் எவரும் இன்னும் இவ்விடயத்தைப் பற்றி இன்னும் ஒரு வார்த்தை கூட சொல்ல முன் வராமல் இருக்கின்றனர் என்பதனையும் ஆப்பிரிக்க மக்கள் ஞாபகத்தில் இருத்தியுள்ளனர். இச்சூழ்நிலையில், பிறரைப் பற்றிய என்ன நினைவுகளில் நாங்கள் ஈடுபட வேண்டும் என்பதைப் பற்றி சிந்திக்க நற்செய்தி கூறும் திருவசனங்களை நினைவுக்குக் கொண்டு வருவோம்:

"*என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே வாருங்கள். உலகம் தோன்றியது முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், நான் பசியாய் இருந்தேன், நீங்கள் உணவு கொடுத்தீர்கள்.*
*தாகமாய் இருந்தேன், என் தாகத்தைத் தணித்தீர்கள்.*
*அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்.*
*ஆடையின்றி இருந்தேன், எனக்கு ஆடை அணிவித்தீர்கள்.*
*நோயுற்றிருந்தேன், என்னை கவனித்துக் கொண்டீர்கள்.*
*சிறையிலிருந்தேன், என்னைத் தேடி வந்தீர்கள்" என்பார்*
(மத்தேயு 25:34-36).

தவக்காலத்தின் தூண்களாகிய செபம், தியானம், நோன்பு, சேவை ஆகிய நான்கும் எம் வாழ்வையும் சிந்தனையையும் செம்மைப் படுத்தி, நேரிய வழியில் எம்மை இட்டுச் செல்வனவாக.

அர்த்தம் நிறைந்த தவக்காலம் இறைவனின் கொடையாக எம்
அனைவருக்கும் வந்தமையட்டும்.

கிறிஸ்துவில் அன்புடன்,

**V. Fr. Tiburtius Fernandez. SMA**